පැනරිස ®
අධ්‍යාපන ප්‍රකාශකයෝ

# கவிதை கற்போம்.




கவிதைத் தொகுப்பு

அன்பான பிள்ளைகளே,

நம் மக்கள் நல்ல சிந்தனைகள் கொண்டவர்கள். எனவே அவர்கள் கவிகள் மூலமாகவும் தம் கருத்துக்களை ஒருவருக் கொருவர் பகிர்ந்து கொள்ளும் ஆற்றல் உள்ளவர்கள். அக்கவிகளிலும் நல்ல பல ஆழமான கருத்துக்கள் உள்ளன. எனவே இக்கவிகளை வாசித்து உங்கள் வாழ்விற்கு தேவையான அறிவுரைகளைப் பெறுவதுடன் எதிர் காலத்தில் நீங்களும் இவ்வகையான கவிதைகளை ஆக்கவும் அதன் மூலம் நம் சமூகத்திற்கு நல்ல பல புதிய விடயங்களைக் கூறலாம். எனவே 4ஆம் 5ஆம் தரம்களில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு இச்சிறு கையேடு மிகவும் பயனுடையது என நினைக்கிறேன்.

இப்படிக்கு,

பௌரச ஆலோசனையாளர்

எம்.வை.கே.டீ.ஆரியதாச.

# சிறிய விதை பெரிய மரம்



மிகச் சிறிய விதையினால்

மிகப்பெரிய மரம் வரும்!

மிகச்சிறிய சிறுவனே

மிகப்பெரிய மனிதனாம்!

ஆலம் விதை சிறியது
ஆலமரம் பெரியது!
ஆலமர நிழலிலே
ஆயிரம் பேர் தங்கலாம்!

பறவைகூடு கட்டலாம்
பழமும் வௌவால் தின்னலாம்!
சிறகடிக்கும் பறவைகள்
சேர்ந்துகூடி வாழலாம்!

ஆலம்விதை போன்றவர்
அருமையான சிறுவர்கள்!
காலாகாலம் வளருவார்
கருணையோடு உதவுவார்!



## சின்னக்குருவி சிறியவீடு



குருவிக் கூடு சிறியது
குஞ்சு வாழச் சிறந்தது
உருவில் சிறிய கூடுதான்
உன்னால் கட்ட முடியுமா?

பன்னாடைகள் சருகுகள்
பனைமரத்தில் கிடைத்ததை
தன்னால் சேர்த்துக் குருவியும்
தானே கட்டிய சிறுகுடில்!

மழையைக் காற்றைத் தாங்கிடும்
வாழும் குஞ்சைக் காத்திடும்
வலிமை யான கூடுதான்
வடிவம் கூட அழகுதான்!

சின்னக் குருவி முயற்சியால்
சிறிய கூடு கட்டினால்
உன்னைப் போலச் சிறுவனால்
ஊரை வெல்ல முடுயுமோ?

# மட்டக்களப்பு நகரம்



மீன் பாடும் நகரம்- காற்று
மிதந்து வரும் நகரம்
தேன் ஓடும் நகரம்- வளர்
தென்னை மர நகரம்

கலை வாழும் நகரம்- தமிழ்க்
கவி பாடும் நகரம்
அலைகடல் நகரம்- இயற்கை
அழகுமிகு நகரம்

நெல் குவியும் நகரம்- பசு
நெய் கமழும் நகரம்
பல்லினமும் வாழும்- எங்கள்
பழந்தமிழர் நகரம்

வந்தவர்கள் தம்மை- அன்பாய்
வரவேற்கும் நகரம்
செந்தமிழின் ஓசை- கேட்டுச்
செவி குளிரும் நகரம்

புலவர் பெரியதம்பி- உலகம்
புகழும் விபுலானந்தர்
குலவி மகிழ்ந்த நகரம்- ஒரு
குடும்பம் போன்ற நகரம்.

## மாவலி கங்கை




மங்கள மகாவலி கங்கையவள்- மலையில்
தங்கும் அருவிகள் கூட்டி வந்தாள்
எங்கள் உணவாகி நீர் தருவாள்- எங்கும்
பொங்கும் பயிர்வளரப் போற்றிடுவோம்.

எங்கும் தொழில்வளம் கண்டிடுவோம்- நன்றாய்
ஏத்தும் உழுதொழில் செய்திடுவோம்
தங்க மின்சக்தியும் தான்தருவாள்- இங்கு
தொங்கிடும் மின்விளக்கு ஏற்றிடுவோம்.

தேயிலை றப்பர் மிளகுடனே - செழித்து
வாழை மா தென்னை வளம் பெருகும்
பாயும் நீள் மகாவலி நீரதனால் -நாட்டில்
பஞ்சம் பிணிநோய் பறந்திடுமே.

## மீன்கள்



எண்ணற்ற வண்ணமாம் மீன்களா- கடல்
ஏரி குளங்களில் நீந்துதடா
கண்ணுக்கு நல்லழகென்று தம்பி - தொட்டி
கட்டியும் வீட்டில் வளர்ப்பாரடா

மின்னும் ஒளிக்கீற்று அசைவதுபோல்- சிறு
மீன்கள் தடாகத்தில் நீந்துதடா
பொன்னும் பொருட்களும் தேடாமல் - நீருள்
புகுந்து மிதந்தவை போகுதடா

ஆழி நதிகள் குளங்களிலும் -அவை
அமிழ்ந்து அழகுற நீந்துதடா
வாழத் துடிக்கும் மனிதருக்கே - தமை
வழங்கியே நல்லுணவு ஆகுதடா.

# ஆறு




கல்லும் மழையும் குதித்து வந்தேன்- பெருங்
காடும் செடியுங் கடந்து வந்தேன்
எல்லை விரித்த சமவெளி யெங்கும் -நான்
இறங்கி தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்

காயும் நிலத்தழல் ஆற்றி வந்தேன்- அதில்
கண்குளிரப்பயிர் கண்டு வந்தேன்
ஆயும் மலர்ப்பொழில் சென்று வந்தேன்- அங்கென்
ஆசை தீர விளையாடி வந்தேன்

ஏறாத மேடுகள் ஏறி வந்தேன்- பல
ஏறி குளங்கள் நிரப்பி வந்தேன்
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன்-மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்

மாங்கனி தேங்கனி வாரிவந்தேன்- பல
வாச மலர்களும் அள்ளிவந்தேன்
தீங்கரும் பாயிரந் தன்னிவந்தேன்- மிகத்
தேனுந் தினையுமே சேர்த்து வந்தேன்

# சுத்தம் சுகம் தரும்



காடும் வயலும் இந் நாளில்
கண்டபடிக்கு அழிவதுடன்
கூடும் குப்பைக் கூளங்களால்
குடிநீர் கெட்டும் வருகிறதாம்!

நல்ல காற்றை நமக்காக
நாளும் தருகிற நல் மரங்கள்
இல்லை யென்று ஆவதனால்
எங்கும் பசுமை அழிகிறதாம்!

கோடிக் கணக்கில் சாலைகளில்
குதித்துப் பாயும் ஊர்திகளால்
ஓடிப் பரவும் நற்காற்று
உலகில் மாறி வருகிறதாம்!

சுற்றுச் சூழல் எப்பொழுதும்
துய்மை யாக ஆனால் தான்
குற்றம் குறைகள் இல்லாமல்
கூடி வாழ வழி செய்யும்.


## பாடுவேன் ஊதுவேன்



பாட்டுப் பாடுவேன் - நான்
பாட்டுப் பாடுவேன்.
பலரும் புகழ இனிய தமிழில்
பாட்டுப் பாடுவேன்.
கேட்டு மகிழவே - நீங்கள்
கேட்டு மகிழவே.
கிளியின் மொழிபோல் இனிய தமிழில்
கீதம் பாடுவேன் - நான்
கீதம் பாடுவேன்.

குழலை ஊதுவேன் - புல்லாங்
குழலை ஊதுவேன்.
கோகுலத்துக் கண்ணன் போலக்
குழலை ஊதுவேன் - நான்
குழலை ஊதுவேன்.
அழகாய் ஊதுவேன் - மிக்க
அழகாய் ஊதுவேன்.
அனைவர் மனமும் மகிழும் வகையில்
அழகாய் ஊதுவேன் - நான்
அழகாய் ஊதுவேன்.

## தொலைக்காட்சி



நாட்டினிலே நடப்பதெல்லாம்
நல்ல பல செய்தியெல்லாம்
வீட்டினிலே காட்டிவிடும்
விந்தையான பெட்டியிது.

தொலைதூரக் காட்சியெல்லாம்
தொடுந்தூரம் தெரிய வைக்கும்.
அலை கடலைத் தாண்டி ஒலி
அலைகளால் அறிய வைக்கும்

விண்வெளியில் நடப்பவரை
வீட்டிற்கே கொண்டு வந்து
கண் எதிரில் காட்டி விடும்.
களிப்படையச் செய்துவிடும்.

வீட்டினுள்ளே திரையரங்கம்
வீடெல்லாம் கலைமுழங்கும்
ஏட்டிலுள்ள கல்வியெல்லாம்
எளிதினிலே ஊட்டிவிடும்.

## ஸ்ரீ லங்கா




குடியர சானது எம் நாடு
குதூகலம் கொள்வோம் எந் நாளும்
ஸ்ரீலங் காவெனும் அதன் நாமம்
சிறப்புக்கள் நிறைந்த திருநாமம்

நாட்டுப்பற்றை எம்முணர்வில்
நலமாய்ப் பூண்டு நாம் வாழ்வோம்
பூரண சுதந்திரம் எமக்குண்டு
பூசலும் பிணக்கும் இனியின்றி

அன்னை லங்கா வளம் ஓங்க
அரும்பணி புரிவோம் ஒன்றாக.

## ஆகாய விமானம்



வானமீ தெழுவேன்- அங்கே
வட்டம் சுற்றிடுவேன்.
கான மலையெல்லாம்- யானோர்
கணத்தில் தாண்டிடுவேன்.

இடைவிடாது தபால்- உலகில்
எங்கும் கொண்டு செல்வேன்.
சடைவி லாமலே - பலரைத்
தாங்கியும் போவேன்.

நன்மை செய்ய வந்தேன் -அதை
நன்குண ராமல்
வன்மைப் போரில் என்னை - இழுத்து
மாட்டி விட்டா ரையோ!

## யாழ்ப்பாண நகரம்



பழமையான நகரம்- எங்கள்
பாட்டன் பூட்டன் -நகரம்
இளமையான நகரம் -வீரம்
எழுந்து நிற்கும் நகரம்

கோயில் சூழ்ந்த நகரம்- கல்வி
கொலுவிருக்கும் நகரம்
தாயைப் போல எம்மை- என்றும்
தாங்கி நிற்கும் நகரம்

கலை நிறைந்த நகரம்- நன்கு

கற்றோர் வாழும் நகரம்

தலை நிமிர்ந்த நகரம்- உலகத்

தமிழர் போற்றும் நகரம்

தேனீ போல உழைக்கும்- மக்கள்

சேர்ந்து வாழும் நகரம்

ஞானி யோக சுவாமி- நல்லூர்

நாவலர் போற்றும் நகரம்


நல்ல தமிழ் கேட்கும்- யாழ்

நகரமெங்கும் காதில்

வெல்ல மென இனிக்கும்- அதை

வெல்லும் சுவை உண்டோ?

# நிலா நிலா



நிலா நிலா ஓடி வா

நில்லாமல் ஓடி வா


பல காலம் இப்படிப்

பாடிப் பயன் இல்லையே!

மலை மேலே ஏறி நீ
வருவாய் என்றே எண்ணினோம்.
மல்லிகைப் பூக் கொண்டு நீ
தருவாய் என்றும் பாடினோம்.

எத்தனை நாள் பாடியும்
ஏனோ நீயும் வரவில்லை.
சத்தம் போட்டுப் பாடியும்
சற்றும் நெருங்கி வரவில்லை.

உன்னை விரும்பி அழைத்துமே
ஓடி நீ வராததால்
விண்கலத்தில் ஏறியே
விரைவில் வருவோம் உன்னிடம்.



# எங்கள் கிராமம்



எங்களூர்க் கிராமம்
எங்கும் இன்ப ராகம்
வானில் பறக்கும் கிளிகள்
கானம் நிறைக்கும் இனங்கள்
சேற்றில் வாழும் மணல்கள்
சோற்றை வழங்கும் கரங்கள்
இயற்கை வாழும் கோயில்
இன்னல் தாவும் வாயில்
உழைப்பே அங்கு பணியாகும்
சோம்பல் மக்களின் பிணியாகும்.

## மழை



வெட்டியடிக்குது மின்னல் — கடல்
வீரத்திரை கொண்டு விண்ணையடிக்குது
கொட்டியடிக்குது மேகம் — கூ கூவென்று
விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா — என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத் திசையும் இடிய — மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி.

## அரிவி வெட்டுப்பாடல்



உண்ண உணவு தந்திடும்

உழவர் வாழ்க வாழ்கவே!

மண்ணை உழுது பயிர்களை

வளர்க்கும் உழவர் வாழ்கவே!

ஒன்றை நூறு நெற்களாய்
உண்டு பண்ணித் தருபவர்.
நன்கு உழுது வியர்வையால்
நனைந்து போக உழைப்பவர்.

கண்ணைப் போலப் பயிர்களைக்
காத்து உயிர்கள் காப்பவர்
உண்ண உணவு இன்றியே
உடல் வருந்தல் நீதியோ?

பாடு பட்டு உழுபவர்
பலனும் கண்டு தருபவர்
நாடு வளர வாழ்பவர்
நன்கு வாழ்க வாழ்கவே!